**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar | |
| Miscellaneous | CC.No. 344/2023 |
| Preliminary register | |
| Sessions | |
| | Prosecution PW 2 |
| Deposition Of Witness for | Defense |
| | Court |
| Name | திரு. பிரகாஷ் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2026 |

எதிரி ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of April 2026.

நான் மூன்றடைப்பில் வசித்து வருகிறேன். சிமெண்ட் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 சந்திரலேகா எனது அண்ணன் மனைவி. விபத்தில் இறந்துபோன அருள்தாஸ் என்பவர் எனது உடன்பிறந்த அண்ணன். எனது அண்ணன் கூலி வேலை செய்து வந்தார். 13.08.2022 ம் தேதி இரவு சுமார் 10.30 மணியளவில் எங்கள் ஊரைச்சேர்ந்த முப்பிடாதி என்பவருடன் சிமெண்ட் லோடு வேலைக்காக சென்றார். என் அண்ணன் சுமார் அரை மணிநேரத்திற்குள் எங்கள் ஊரில் உள்ள திருநெல்வேலி நான்குநேரி தேசிய நெடுஞ்சாலையில் கார் மோதி காயம் ஏற்பட்டதாக தேஜி என்பவர் சொல்ல கேள்விப்பட்டேன். நான் உடனே சம்பவயிடம் சென்று அங்கு எனது அண்ணனை பார்த்தேன். அவருக்கு தலையிலும், இடது காலிலும் பலத்த காயம் ஏற்பட்டது. அவர் சுயநினைவின்றி இருந்தார். நானும், அங்கிருந்தவர்களும் உடனடியாக 108 ஆம்புலன்ஸிற்கு தகவல் தெரிவித்து திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு சென்றோம். அங்கிருந்து நாங்கள் அ.சா.1 ற்கு தகவல் தெரிவித்தோம்.

அங்கு சுமார் 3 நாட்கள் சிகிச்சையிலிருந்து எனது அண்ணன் சிகிச்சைபலனின்றி இறந்துபோனார். இதுசம்பந்தமாக போலீஸார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எனது அண்ணனுக்கு விபத்து ஏற்பட்டது எந்த வாகனத்தால் ஏற்பட்டது என எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த காரை யார் ஓட்டிவந்தார் என எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.04.10 17:41:46 +0530

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar | |
| Miscellaneous | CC.No. 344/2023 |
| Preliminary register | |
| Sessions | |
| | Prosecution PW 1 |
| Deposition Of Witness for | Defense |
| | Court |
| Name | திருமதி. சந்திரலேகா |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2026 |

எதிரி ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of April 2026.

நான் மூன்றடைப்பில் வசித்து வருகிறேன். சமையல் வேலை பார்த்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன அருள்தாஸ் என்பவர் எனது கணவர். எனது கணவர் கூலி வேலை செய்து வந்தார். கடந்த 13.08.2022ம் தேதி இரவு 10.00 மணிக்கு எங்கள் ஊரைச்சேர்ந்த முப்பிடாதி என்பவர் அழைத்ததின்பேரில் சிமெண்ட் லோடு இறக்குவதற்காக வீட்டிலிருந்து சென்றார். வீட்டிலிருந்து சென்ற சுமார் கால்மணி நேரத்தில் தேஜி என்பவர் எனது கணவர் எங்கள் ஊரில் உள்ள திருநெல்வேலி நான்குநேரி தேசிய நெடுஞ்சாலையில் விபத்தில் காயம் அடைந்துவிட்டதாக தகவல் சொன்னார். அதன்பேரில் நான் விசாரணை செய்ததில் 108 ஆம்புலன்ஸ் மூலம் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கூட்டி சென்றதாக கேள்விப்பட்டு அங்கு சென்றேன். அங்கு சிகிச்சையிலிருந்த எனது கணவர் சுயநினைவு இல்லாமல் இருந்தார். எனது கணவருக்கு தலையிலும், காலிலும் பலத்த காயம் ஏற்பட்டது. என் கணவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாலைவிபத்தில் கார் மோதியதில் ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். எந்த கார், அதனை ஓட்டியவர் யார் என்று

எனக்கு தெரியாது. மறுநாள் காலையில் போலீஸார் என்னை விசாரணைசெய்து என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் கையெப்பம் வாங்கிசென்றார்கள். புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும். என் கணவர் மூன்று நாட்கள் சிகிச்சைக்கு பிறகு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். இது சம்பந்தமாக போலீஸார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

புகார்வாக்குமூலத்தில் என்ன எழுதியிருந்தது என எனக்கு தெரியாது என்றால் சரிதான். என் கணவரின் இறப்பிற்கு எதிரிதான் காரணம் என்று எந்த வாக்குமூலத்திலும் போலீஸாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை என்றும், வெற்று பேப்பரில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான்.

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.04.10 17:41:52 +0530